
www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

வயம்

ஆசிரியர் ———
விஸ்வாமித்திரன்

தனி இதழ் ———
8.00

ஆண்டு சந்தா ———
30.00

காலாண்டிதழ் ———
தனிச்சுற்று

படைப்புக்கள் மற்றும்
விமர்சனங்களுக்கு ———

183, 3வது பிரதான சாலை
நடேசன் நகர்
விருகம்பாக்கம்
சென்னை — 600 092.

புகைப்படம் ———
சோமாலியச் சிறுவன்

புகைப்படக் கலைஞர் ———
ROBERT CAPUTO

நன்றி ———
NATIONAL GEOGRAPHIC

மின்னஞ்சல் ———
viswamithiran@yahoo.com

படிப்பகம்

www.padippakam.com

குழந்தையின் கைகளால்
தினமும் நிகழ்ந்துவிடுகிறது
எறும்புகளின் மரணம்

கவனம் திருப்ப சொன்னேன்
எறும்பு பாவம்
அதன் அம்மாவிடம் செல்லட்டுமென

உயிர் பயத்துடன்
ஒளிந்து கொள்ள
இடம்தேடி அலைந்த பூரானை
ஆவேசமாய் அடித்துக் கொன்றேன்
(அனைவரின் பாதுகாப்பிற்கு
என்ற பாவனையில்)

குழப்பத்துடன்
குழந்தை கேட்டது
ஏன் அதனை அம்மாவிடம்
அனுப்பவில்லை என்று

குழந்தைகளை குழந்தையாய்
அணுக வேண்டியிருக்கிறது —
ஒரு பறவையின் சிந்தனையோடு.

■

சூர்யமுகி

படிப்பகம்

www.padippakam.com

• மூன்று கவிதைகள் •

இன்று உன்னிடமிருந்து தொலைபேசி
வருமென எதிர்பார்த்தபடி
சரியாய் நானே எடுத்தேன்
வழக்கம்போல் சரிவர என்னால்
பேசமுடியவில்லை
எப்பொழுதும்போல் கடைசி பெருமுச்சுடன்
வைத்துவிட்டாய்
உன் இயல்பே அதுதான்
பேசிவிட்டு
தட்டில் கைவைத்தபடி நினைவுகள்
ஏதுமற்று
சாதத்தில் கைஅலைந்த வண்ணம்
சில நிமிடங்கள் கழித்து நிதானப்பட முடிந்தது.

2.

இம்முறையும்
உன் தொலைபேசி அழைப்பு
தனிமனிதனின்
விருப்பு வெறுப்புகளை
கேள்வி எழுப்பும் வண்ணம்
உன் நட்பு
உன் உறவின்மூலம்
இருப்பின், கரைதலின், அன்பின்
இயல்புகளை உணரக் கற்றுக்
கொண்டேன்
சில நிமிடங்களில்
எதுவும் செய்ய முடியாமல்
போவதை, காலத்தின்
ஓட்டத்தை, நம் இருப்பின்
அர்த்தமின்மையை
புரிந்து கொள்ள முடிகிறது

படிப்பகம்

www.padippakam.com

இது
எல்லோருக்கும் இயல்புதான்
நண்பா
உன் தோழமையை நான்
உணர்ந்த கணம்
மண்ணின் நீர் உறிஞ்சும் ஓசையை
கேட்க முடிந்தது
அதன் வாசனையை அருகிருந்து
நுகர்ந்தேன்
பூக்களுற்று, இளம் தளிர்களின்
வெளிர்நிறம்

என் ஸ்பரிசம் பட்டு செடி
சிலிர்த்துக் கொண்டது
நகர்ந்து மேல்
வானம் பார்த்தகணம்
கோடையின் முதல் மழைத்துளி
எங்கும் எங்கும்.

3.

ஒவ்வொரு முறையும் உறுதி கொள்கிறேன்
என்னைப் புரிந்து கொள்வாய் என
என் முகமலர்வு
சிலிர்ப்பு, ஏகாந்தம், ஒருமை
அத்தனையும் சூன்யமாய் போயிற்று
உன் வார்த்தையால்
எப்படி உணராமல் போனேன்
என் இருப்பு உனக்கு முள்ளானதை
எப்படி உணராமல் போனேன்
வாள் கொண்டு கீறிய ஆறாத்தழும்பை
காலம் மாற்றுமா
நெருப்பின் பயமறிந்த குழந்தையின்
மிரட்சி மனதில்
சதா உள்மனம் அழைக்கிறது
ஊர்வெளித் தனிமை.

■

படிப்பகம்

www.padippakam.com

" **மலர்கள் எங்கிருந்து வருகின்றன**
நீ கேட்கிறாய்
இளவேனில் தெய்வத்திற்கும் தெரியாது"
– ஸென்

மேலும் நீ கேட்கிறாய்
ஏன்
பறவைகள் கண்டம் பெயர்கின்றன
மழைக்காலங்களில் கவிதையென
பூமி இன்னும் அழகாய்
அந்த சிறுவன் மண் புழு
பிடித்து விளையாடு வது
பூக்கள் பூக்கின்றன ஓவியமாய்
மேகங்கள் அலைவதும்
ஓயாமல் அலைகள் பாடுவதும்
யாரும் சொல்லாமலே
எல்லா பருவங்களும் வருகின்றன
போகின்றன வழி
தடங்களற்று நகரும் வாழ்வு
என்னை கேட்டால் என்ன தெரியும்
ஒரு சமயம்
காதலை புரிந்து
கொண்டால் எல்லாம் புரியும்
என்பதை தவிர
அல்லது வேறு என்ன சொல்ல.

ஹவி

■

படிப்பகம்

www.padippakam.com

முலைகள்

●

முலைகள்
சதுப்புநிலக்குமிழிகள்

பருவத்தின் வரப்புகளில்
மெல்ல அவை பொங்கி மலர்வதை
அதிசயித்துக்காத்தேன்

எவரோடும் ஏதும் பேசாமல்
என்னோடே எப்போதும்
பாடுகின்றன
விம்மலை
காதலை
போதையை...

மாறிடும் பருவங்களின்
நாற்றங்கால்களில்
கிளர்ச்சியூட்ட அவை மறந்ததில்லை

தவத்தில்
திமிறிய பாவனையையும்
காமச்சுண்டுதலில்
இசையின் ஓர்மையையும் கொண்டெழுகின்றன

ஆலிங்கனப்பிழிதலில் அன்பையும்
சிசுகண்ட அதிர்வில்
குருதியின் பாலையும்
சாறெடுக்கின்றன

ஒரு நிறைவேறாத காதலில்
துடைத்தகற்ற முடியாத
இரு கண்ணீர்த்துளிகளாய்த் தேங்கித்
தளும்புகின்றன.

■

படிப்பகம்

www.padippakam.com

• தீப்தி •

ஒரு நொடி
ஒரு நிமிடமாக
மணித் துளிகளாக
நீள்கின்ற நூற்றாண்டுகள்
நிற்கின்ற நான்

காலச்சக்கரம் அறியாமல்
தொடர்கின்ற நாட்கள்

வேலை
குழந்தைகள்
கணவன்
என குடும்பம்

சிரமங்கள்
இல்லறச் சுமைகள்
நோய்
சொந்த வீடில்லாத அவஸ்தை
எல்லாம் விதி

ஒரு உத்தியோகம்
அதற்கான செயல்கள்
எல்லாம் அடிப்படையானது

அனைத்தும் அதன் போக்கில்

நான்
எனது நிமிடங்கள்
பிறருக்கானது

என் தத்துவம்
என் கவிதை
என் இலக்கியம்
யாத்ரீகன் தங்கிச்செல்லும்

படிப்பகம்

www.padippakam.com

அரிதான
நடைபாதை சத்திரம்போல

நான்
நான் மாத்திரமே

காரணங்கள்
பிரச்சனைகள்

மீதம்
எல்லாவற்றிலும்
எனது பெருமுச்சு மட்டும்.

■

• குட்டி ரேவதி •

• கையறு நிலை •

வட்ட மேடையில் வெற்றிச்சிரிப்போடு வந்துதிக்கும் கோமாளிதான்
இளமை. கவனத்தை தன் மந்திர சேஷ்டைகளால் மூழ்கடிப்பவன்
வெல்லும் வழி, அவனைக்கண்டு நாமும் நகைப்பதே

ஒரு சம்பவம் பல கண்களால் தொடுக்கப்பட்டு
கழுத்தில் சூடப்பட்டு, களையப்படுகிறது தலை
யான் இங்கு ஒரு தலையற்றவள் மட்டுமே

காதலனுக்கு வாசிக்கத் தந்த புத்தகத்தில்
எல்லா எழுத்துகளும் உதிர்ந்துபோயிருந்தன திரும்பப்பெறுகையில்
கண்ணீரைத் தேக்கித் தந்தானோ ?

என் தொண்டை விழுங்கத் திணறுகிறது
கூழாங்கல்லைப் போலிருக்கும் அவனை.
ஆனாலும் அதன் பளிங்குச்சுவையையே
நாடுகிறது என் அலகு

தங்களைப்பூக்களாகவோ, பறவைகளாகவோ எண்ணிக்கொள்ளும்
பெண்கள் நிறைந்த பாழ் மண்டபத்தில்
கண்மூடி எல்லோரும் உற்றுநோக்கும்
ஓர் உருக்கமான மெழுகுவர்த்தி நான்.

■

படிப்பகம்

www.padippakam.com

னிய மெஜா,

வறு)

க
தாலைக்காட்சி – செய்திகளில்
டியும்
ஜிக்கள் குடித்த ரத்தம்
ரண்டும் உன்
ரினக் கிளர்வுக்கு மருண்டு
ன் மடிமீதமர்ந்த குழந்தை
தியின் தென்பட்ட விபத்தில்
தறிப் போனது
தன்
றிவசித்த அறையில்
ப்பான்களின் அரசியல் நெடி
ணுவெடிப்பை
ன் முகத்தில் கையடித்து
நளிக்க விழையும்
ப்போது

• One Sunday Morning •

– தவிர
அதிகாலை நீரின் குறிவிறைப்பாய்
ஞாபகமூச்சை உள்நெரிக்கும்
உன்
பாடலில்
டாலியின் ஓவியக் குழந்தைகள்
பறந்து தவழ்ந்தன
வெளியெங்கும்
என்னுள்
இசைப்பூக்கள் சூழ
சாவில் மிதந்தேன்
இன்று

(வேறு)

பசுமை வீழ்ந்த
பூமியில்
புறமுதுகிட்ட இயற்கையின்
கலக்கம் ஏந்தி
Jenet Jackson
நிற்க இடமில்லாது
இறக்கைதேடி பறக்கிறாள்
கோபுரங்களின் வழி

படிப்பகம்

www.padippakam.com

(வேறு)

அப்புறம்
தொழு நோயாளியின்
பாத்திரக் கேவலில்
ஓர் கவிதை தோன்றிற்று
பக்கம் நீ
T.S. Eliot -ன் கவிதையை
உடையவிழ்த்துக் கொண்டிருந்தாய்
நேற்றிரவின் குடி
போதையில்
உண்ணாமல் விட்ட பருக்கைகள்
இன்று
காக்கைகளின் பிரத்யேக
கனவானது
வைதேகியின் ஓவியமுலைக் காம்பு
யாருடையது என
மனம் கலைந்து
சிற்பம் ருசிக்கும் ஈ
மொய்த்து விட்டகலும்
நீ இன்னும்
போ– காத தூரம்

(வேறு)

Wim Wenders- ன் திரை வீதிகளில்
மனமவிழ்ந்து
அலைகிற என்
உலகக் குரூரம் குறித்த
குரல் வெடித்த பேச்சின்
தொடர்புத் துணிவில்
சிறுவயதில் வாய் புணர்ச்சிக்கும்
தொடை புணர்ச்சிக்கும்
உட்பட்ட அவலத்தை
தயங்கினபடி
உரைத்தது நண்பனின் கூற்று
பின்பு ஆனது
தவிர்க்க இயலாமல்
எங்கள் மௌனத்தில்
தென்னை சாயும் பதற்றம்

படிப்பகம்

www.padippakam.com

று)

பொழுது பார்த்த
லகொலையுண்ட மனிதனின்
சவற்ற சலனத்தில்
nu Kurewa - வின் பறைபதட்டம்
றந்து
ங்கின் திரைவீழ்ச்சியில் மௌனிக்கிறது
n Saro Viva - வின் உயிர்விக்கல்
ல் நெரித்து
சலாடும் கயிறு
டயுதறிச் செல்லும் பாம்பின் வாலசைவு
ல
முறை
பால்ய ஆற்றில்
ட்டதிர்ந்த யானையின் அதிபிளிறல்
ல் நகைத்துக் கூறும்
ளும் புறமும் அலைந்து திரியும்
ரமாதித்யனின்
ளைகட்டிய மனம் லயிக்கும்
சூழ்ந்த
ணின் கதை

eorges Bataille-ன் நினைவில்)

---

m Wenders - ஜெர்மனிய திரைப்பட இயக்குனர்
eja, Jenet Jackson - பாப் இசைப் பாடகிகள்
lvador Dali - ஓவியர்
S. Eliot - கவிஞர்
தேகி - தமிழக ஓவியர்
க்ரமாதித்யன் – தமிழ்க் கவிஞர்
en Saro Viva - நைஜீரிய எழுத்தாளர், நாடகாசிரியர். சூழலிய புரட்சிக்காக
க்கிலிடப்பட்டவர்.
anu kurewa - One Sunday Morning - எனும் குறும்படத்தின் இயக்குனர்.
ந்தப் படம் Ken Saro Viva - வின் மறைவிற்கான அஞ்சலி.
eorges Bataille - 'கண்ணின் கதை' நாவலின் ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

• சூர்யமுகி •

என்னைச் சுற்றிலும்
எப்பொழுதும் கூட்டம்
அதன் பரபரப்பு என்றும்
என்னைப் பாதித்ததில்லை
நெரிசலின் வியூகத்தில்
சிக்காமல் தப்ப முடிவதில்லை
இடித்தாலும் மிதித்தாலும்
ஊடே நடக்கத்தான்
வேண்டியுள்ளது
பரவி நிற்கும் வெளிச்சத்தில்
தடுமாறிய நேரம் பல உண்டு
இருந்தாலும் அதன்
பாதிப்புகளுக்குள்
என் மனம் சிக்கியதில்லை
தன்னிச்சையாய் நிற்கும்
இருட்டின் மச்சத்தில்
இறங்கி நடப்பதுண்டு
பல கணங்களில்
அப்பொழுது இருபுறமிருந்தும்
வரும் சிரிப்பலைகள்
என்னைக் கட்டிப்போடும்
வேறு வழியின்றி
நான் நின்றுதான் விடுகிறேன் –
முடியாமலும் தெரியாமலும்.

■

படிப்பகம்

www.padippakam.com

• ஒளி •

கூர்மையாய் கவனிக்க கவனிக்க மேலும்
அல்ப விஷயமா – மகா விஷயமா
குழப்பம் வளர்கிறது
நட்ட நடு இரவில்
சுவரில்
ஒற்றையாய்
எறும்பு
ஊர்கிறது
எங்கோ
எதற்கோ

■

படிப்பகம்

www.padippakam.com

முன்பு ஓர் இரவு...

●

இரவெங்கும்
ஒரு கசப்பான நிறம் படர்ந்திருந்தது

கண்ணீர்
அலையென பொங்கியெழுந்து அடர்ந்தது ஒரு காடென

வானம்
நெட்டுயிர்த்து நின்று இன்னும் உயரம் தேடியது

கனவுக்குமிழி
இமைகளுக்குள் படபடத்து நொறுங்கி வழிந்தது

தனிவீதி
அதன் சோபையை வரைந்து கொண்டிருந்தது ஒரு கிழநத்தை

மரணம்
அசையும் ராட்சத நிழலாய் ஒளிந்திருந்தது கதவுகளின் பின்

என்னிதயம்
உலர்ந்த சிறகாய் முறிந்த கிடந்தது உன்படுக்கையருகில்

■

● குட்டி ரேவதி ●

படிப்பகம்

வயல் • கவிதைக்கான காலாண்டிதழ் • ஜனவரி 2001 • 1

www.padippakam.com
படிப்பகம்